**சுருக்கம்**

மோட்டார் வாகனம் – தர்மபுரி துணை இயக்குநர், தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை வாகனம் எண். TN 09 G 1585 விபத்துக்குள்ளானது – இழப்பீட்டுத் தொகை ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் (ஏடி1) துறை**

அரசாணை (ப) எண்.1401 நாள் : 08.12.2020

திருவள்ளுவர் ஆண்டு 2051
சார்வரி, கார்த்திகை – 23

படிக்க:-

தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை இயக்குநரின் கடிதம் ந.க.எண்.7190/சி3/2012, நாள். 17.12.2019 மற்றும் 31.12.2019.

******

**ஆணை:**

பார்வையில் காணும் கடிதத்தில், தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை இயக்குநர் தர்மபுரியை சார்ந்த மோட்டார் வாகனம் (TN09 G 1585, மார்ஷல்) 03.05.2011 அன்று விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறையின் தர்மபுரி மாவட்ட பணிமனை(சு)–யைச் சார்ந்த உதவிப் பொறியாளர் திரு.பி.ரமேஷ் ஆர்தர் வால்டர் என்பவர் விபத்தில் மரணமடைந்ததாகவும், அன்னாரின் மனைவி திருமதி எஸ்தர் ஹேமலதா, திருப்பூர் சப் ஜட்ஜ் கோர்ட்டில் (MCOP No.823/2012) தொடர்ந்த இழப்பீட்டு வழக்கில் “மனுதாரருக்கு இழப்பீடாக ரூ.32,41,760/–னை நிர்ணயம் செய்து தீர்ப்பளிக்கப்பட்டதாகவும், அவ்விழப்பீட்டுத் தொகையில், 75% தொகையான ரூ.24,31,320/–னை 2ம் எதிர் மனுதாரரான துறை இயக்குநர் அவர்களும், 25% தொகையான ரூ.8,10,440/–ஐ 5ம் எதிர் மனுதாரரான “தி நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்–ம்” மனுதாக்கல் செய்த நாள்முதல் தொகை முழுவதும் வைப்பீடு செய்யும் நாள் வரை 7.5% வட்டியினை கணக்கிட்டு, வட்டி செலவுத் தொகையுடன் 2 மாத காலத்திற்குள் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

2. மேலும், தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை இயக்குநர் அவர்கள் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவானது குறிப்பிட்ட நாளுக்குள் தாக்கல் செய்யப்படாததால், தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், அத்தீர்ப்பாணையில் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய 75% தொகையான ரூ.24,31,320/–ற்கு 7.5% வட்டியுடன் பெற்று வழங்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். மேலும், விபத்துக்குள்ளான வாகனத்தை ஓட்டிச்சென்ற திரு.வெ.மாதையன், முன்னாள் சிறப்பு கைவினைஞருக்கு ரூ.16,024/– தொகை நிர்ணயம் செய்யப்பட்டு அத்தொகை பிடித்தம் செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். எனவே, வழக்கு எண். MCOP No.823/12-ல் 21.07.2014 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பாணையினை அமல்படுத்தும் பொருட்டு ரூ.34,18,030/–னை (ரூபாய் முப்பத்து நான்கு இலட்சத்து பதினெட்டாயிரத்து முப்பது மட்டும்) ஒப்பளிப்பு செய்யுமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

(த.பி.பா.)

3. தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, திருமதி எஸ்தர் ஹேமலதா என்பவரால் திருப்பூர் சப் ஜட்ஜ் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு எண்.823/12-ல் 21.07.2014 நாளன்று வழங்கப்பட்ட தீர்ப்பினை அமல்படுத்தும் பொருட்டு இழப்பீட்டுத் தொகையாக ரூ.34,25,122/-ஐ (ரூபாய் முப்பத்து நான்கு இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து நூற்று இருபத்திரெண்டு மட்டும்) வழங்கலாம் என முடிவெடுத்து, அதற்காக நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

**"2211 – 00 குடும்பநலன் – 104 – போக்குவரத்து மாநிலச் செலவினங்கள் – AA – பொதுச் சுகாதார மருத்துவத் துறையின் மோட்டார் வண்டிகளைப் பராமரிப்பதற்கான பணியாளரமைப்பு – 351 இழப்பீடு – 52 ஏனைய இழப்பீடுகள் – சாட்டியது"**
**(IFHRMS த.தொ.கு. 2211-00-104- AA-35152)**
**(பழைய த.தொ.கு. 2211-00-104- AA-5122)**

5. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட ரூ.34,25,122/- செலவினத்தினை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2020-21-ஆம் நிதியாண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினம் 2020-2021 ஆம் நிதியாண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 3-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பெற்று வழங்கிட, தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், மேலே பத்தி 3-இல் அனுமதிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2020-21 நிதியாண்டிற்கான துணை மதிப்பீடுகள் / திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (சுகாதாரம் 1 / வ.செ.பொ.- I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.33123/சுகாதாரம்-I/2020, நாள் 01.12.2020-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.989 (தொள்ளாயிரத்து எண்பத்து ஒன்பது).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஜெ. ராதாகிருஷ்ணன்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
இயக்குநர், தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை, சென்னை-600 032.
மாநில கணக்காயர், சென்னை -600 018.
மாவட்ட கருவூல அலுவலர், திருப்பூர்-641 604.

(த.பி.பா.)

சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–600 035.

**நகல்:-**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சர் அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
உள் (போக்குவரத்து) துறை, சென்னை–600 009.
நிதித் (வரவு செலவு பொது–1/2/சுகாதாரம்–I/ வழிவகைகள்–1) துறை, சென்னை–600 009.
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (தகவுப்பிரிவு) துறை, சென்னை –600 009.
இருப்பு கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

11/12/2020
பிரிவு அலுவலர்

11/12/2020